பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

...:6 பிரமோதூத ஹூ மாசி மீ 28 உ செவ்வாய்க்கிழமை (12-03-1991) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:105

# புலிகளின் தாக்குதல் தீவிரம்

# 1 வாரத்தில் 50 படையினர் பலி!

## இராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 12

ஸ்ரீலங்கா அரசபடைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் தாக்குதல் தீவிரமடைந்து வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஐம்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களில் 15 இராணுவத்தினர் உயிரிழந்ததையும் சேர்த்து, சென்ற வாரத்தில் மட்டும் உயிரிழந்த ஆயுத படையினரின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்திருக்கிறது.

அமைச்சர் ரஞ்சனை கொன்ற வெடிகுண்டுச் சம்பவத்தின் பின்னர், இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதலாக தோப்பூர், திரியாய் சம்பவங்கள் அமைந்தன என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன என்றும் கொழும்பில் இராணுவப் பேச்சாளர் சொன்னார். [உ-எ]

### மோதல்

நேற்றுக்காலை 6 மணியளவில் கட்டுவன் முகாம் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றன.

சுமார் அரை மணி நேரம் அப்பகுதியில் வேட்டுச்சத்தங்கள் கேட்டன. ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன.

இதேவேளை நேற்று முன்தினம் மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

அரசடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன. சில வீடுகள் சேதமடைந்தன. [உ 68]

## பாண்டிருப்பில் தமிழர் கைது

கொழும்பு, மார்ச் 12

கிழக்கு மாகாணம், பாண்டிருப்புப் பகுதியில் அண்மையில் விசேட அதிரடிப் பொலீஸ் படையினர், நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 92 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் அவர்களில் ஒருபகுதியினர் விடுவிக்கப்பட்டனர் என்றும்—

எஞ்சியோர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## தீர்வு காலம் நெருங்குகிறது என்கிறார் விஜேதுங்கா

கொழும்பு, மார்ச் 12

வடக்கு — கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காணும் காலம் அண்மித்துவிட்டது.

பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

உடுநுவரயில்நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில், திரு. விஜேதுங்கா இத்தகவலை வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கு சண்டை நின்றால், இப்போது அதற்கு செலவிடப்படும் 50 கோடி ரூபா பணம் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காகச் செலவிட முடியும் என்றும் திரு. விஜேதுங்கா சொன்னார்.

பாதுகாப்பு துணை அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் திரு. விஜேதுங்கா நிகழ்த்திய முதலாவது பகிரங்கப் பேச்சு இதுவாகும்.

### முச்சந்தி முரளி



நிதி அமைச்சர் எல்லே... கடன் நெருக்கடியைத் தீர்க்க தீர்வைப் பற்றிப் பேசுகிறார் போலை......!

## காரைநகரில் ஷெல் தாக்கு! இரு சகோதரிகள் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

காரைநகர் முகாமிலிருந்து நேற்றிரவு 7 மணியளவில் இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்

காரைநகர் வாரிவளவுப் பகுதியில் வீடு ஒன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் இருவர் காயமடைந்தனர்.

எஸ் சரோஜினிதேவி [வயது 17], அவரது சகோதரி எஸ். சற்குணதேவி [வயது 15] ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். [உ-5]

## சல்லிப் பகுதியில் கைதான தமிழ்க் குடும்பம் எங்கே?

யாழ்ப்பாணம், மார்ச் 12

கடந்த மாதம் 27 ஆம்திகதி திருகோணமலை நகருக்கு அருகே சல்லி என்ற இடத்தில் முஸ்லிம் ஊர்காவலரினால் அழைத்துச் செல்லப்பட்ட ஒரு குடும்பத்துக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை

அன்றைய தினம் இரவு 7.45 மணியளவில் சல்லியைச் சுற்றி வளைத்த முஸ்லிம் ஊர்காவலர்கள் பஞ்சலிங்கம் என்பவரையும் அவரது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் கூட்டிச் சென்றதாக கூறப்படுகிறது

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இது வரைத் தெரியவரவில்லை.

### பயணிகள் அனுமதி

கொழும்பிலிருந்து வந்த பயணிகள் நேற்று வவுனியா ஊடாக வடக்கு நோக்கி வர அனுமதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இங்கிருந்து சென்ற பயணிகள் சிலர் வவுனியாவில் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. [உ-5]

## சந்திரசேகர் அரசுக்கு தொடர்ந்து ராஜீவ் ஆதரவு

புதுடில்லி, மார்ச் 12

பிரதமர் சந்திரசேகரின் அரசுக்கு தொடர்ந்து நிபந்தனையின்றி காங்கிரஸ் கட்சி ஆதரவு தரும் என்று அக்கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி பிரதமர் சந்திரசேகரிடம் கூறினாராம்.

ஆனால எதிர்க்கட்சிகளும் தனக்கு ஆதரவு தர இணங்கினால் மட்டுமே தான் ஆட்சியில் தொடர்ந்து இருக்க முடியும் என்று பிரதமர் சந்திரசேகர் அவருக்கு பதிலளித்தாராம்

எதிர்க்கட்சித் தலைவரும் பாரதிய ஜனதாகக் கட்சிப் பிரமுகருமான எல். கே. அத்வானி நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் வரை தமது அரசு ஆட்சியில் நீடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்குமா என்று பிரதமர் சந்திரசேகர் தொலைபேசி மூலம் தம்மிடம் கேட்டதாகவும் அவர் சொன்னார். [உ]

# இந்திய அரசியல் நெருக்கடி

# ஜனாதிபதி முடிவு இன்று

புதுடில்லி, மார்ச் 12

இந்திய அரசியல் நெருக்கடி தொடர்பாக ஜனாதிபதி வெங்கட்ராமனின் முடிவு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ இடைக்காலப்பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதா?

★ தற்போதையநாடாளுமன்றத்தைக் கலைப்பதா?

★ பிரதமர் சந்திரசேகரின் இடத்துக்கு புதிய பிரதமராக அல்லது காபந்து பிரதமராக செயற்படுவதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியை அழைப்பதா?

அரசியல் வட்டாரங்களில் மேற்கண்டவாறு கிளப்பப்படும் சந்தேகங்களுக்கு தெளிவை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் அறிவிப்பு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பல முக்கிய சட்ட மூலங்கள்— கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில்—விவாதங்களின்றியே குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டன.

இந்தியாவின் இடைக்கால பட்ஜெட், ரயில்வே பட்ஜெட் ஆகியனவும்—

தமிழகம், ஜம்மு காஷ்மீர். அஸாம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களினதும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தினதும் பட்ஜெட்கள் ஆகியனவும்—

அஸாம், பஞ்சாப் மாநிலங்களில் ஆளுநர் ஆட்சியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் அரசியல் சட்டத்திருத்தப் பிரே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தபால்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

லங்காசிறி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த தபால் பொதிகள் நேற்றுப் பிற்பகல் அங்கிருந்து யாழ். தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன

தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு அநேகமாக இன்றே விநியோகிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. [உ-5]

## பெண் சிப்பாய்களுக்கு பயிற்சி

கொழும்பு, மார்ச் 12

வவுனியா, தச்சன்குளம் இராணுவ முகாமில் பெண் இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

குறுகிய கால இராணுவப் பயிற்சி பெற்ற 25 பெண்கள் அண்மையில் பயிற்சியை முடித்துக் கொண்டுவெளியேறினார்கள் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் இந்து 29 வயது நிரம்பிய U.K.யில் PH.D விரிவுரையாளர் மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமற்ற டாக்டர் அல்லது B.Sc. விரிவுரையாளர் மணமகள் தேவை. நட்சத்திரம் சுவாதி. 29 வயது நிரம்பிய U.K, I.C.M.A கணக்காளருக்கு படித்த மணமகள் U.K யில் தேவை. நட்சத்திரம் அனுஷம். தொடர்பு ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16095]

### ரைப்ரைட்டர்கள்

Typewriters: தமிழ் - ஆங்கிலம் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித கட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] [சி 5835]

### புத்தகம்

இன்றைய வளைகுடாப் போர் [போர் — தந்திரங்கள் — விளைவுகள் — தாக்கங்கள்] By அ. சி. உதயகுமார், B Sc. இந்நூல் சர்வதேச அரசியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அப்படியான ஆய்வுகளை மேற்கொள்ள முற்படுவோருக்கும், பெருமளவில் பயன்படக்கூடிய அரிய நூல் வெளியீடு: Tamil Institute of Strategic Studies விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C/5834]

### மணமகன் தேவை

43 வயதுடைய சைவ போசனமுடைய 18 வருடங்கள் சேவை புரிந்து ஆசிரியராக அவரது சகோதரர் அரசாங்க உத்தியோகத்தில் உள்ள மணமகனைத் தேடுகிறார். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். குறிப்புக்களுடன் விவரமாக விண்ணப்பிக்கவும். இல:- 192, C/O உதயன். [16093]

### மலிவு விற்பனை

வீட்டுப் பாவனைப் பொருள்கள் சில, மரத்தளபாடங்கள், சைக்கிள், கஸெற் றேடியோ உட்பட. தொடர்பு: 504, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [16096]

### புலமைப்பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை [ஆண்டு 6] 17 03-91 ஞாயிறு மு. ப. 8-00 - மு. ப. 10-30 - பி. ப. 1-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப்பரிசில் மாதிரி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன ஆண்டு4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16098]

### தெருக்கூத்து

ஒட்டுசுட்டான், மார்ச் 12

வன்னிப் பிரதேசத்தில் முல்லை மாவட்ட கலை கலாசாரப் பிரிவினரின் "அரக்கரை அழிப்போம்" என்னும் தெருக்கூத்து நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. [இ 113]

## சேவை நலம் பாராட்டு விழா

**தொழில் நுட்பக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்,**

சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும்

**அதிபர் திரு. சி. இராஜேந்திரா**

அவர்களின்

**பிரியாவிடை வைபவம் 17 03 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணியளவில்**

கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் மாணவர்களும், பழைய மாணவர்களும், நிரந்தர, பகுதிநேர விரிவுரையாளர்களும், அலுவலக உத்தியோகஸ்தர்களும் தயவுசெய்து சமுகம் கொடுக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**- மாணவர் விழாக் குழுவினர் -**

தொழில் நுட்பக் கல்லூரி
கொக்குவில், யாழ்ப்பாணம். [16094]

## நோயாளரை 'புல்ஸ்காப் காகிதம்' கொண்டு வரும்படி பணிப்பு

நவாலி மார்ச் 12

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் இரண்டு புல்ஸ்காப் காகிதங்கள் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாம்.

நோய் சம்பந்தமான விவரங்களைப் பதிவதற்குத் தேவையான பதிவுப்பத்திரங்களை சுகாதாரப் பகுதி அனுப்பி வைக்காததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

### கலையரங்கு

கொடிகாமம், மார்ச் 12

பலாலியில் அண்மையில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த வரணியைச் சேர்ந்த லெப்டினன்ட் அசோக்கின் 31 ஆம் நாள் நினைவாக 'அசோக்' கலையரங்கு இடைக்குறிச்சியில் திறந்து வைக்கப்பட்டது. [இ-75]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாறு

எமது கல்லூரியின் வரலாற்றினை ஆராய்ந்து தீர்மானிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் S. பத்மநாதன் அவர்களின் தலைமையில் அறிஞர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் இம்மாத இறுதிப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை அலுவலகத்தில் இந்துக் கல்லூரியின் வரலாறு சம்பந்தமாக கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறவிரும்புவோரைச் சந்திக்க உள்ளனர். இக்குழுவினர் தமது ஆராய்ச்சிகளை மேற்கொள்ள, இந்துவுடன் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும் பெரும் உதவியாக இருக்கும். ஆகவே இவ்விடயத்தில் ஆர்வம் கொண்டோர் தயவுசெய்து இன்றிலிருந்து இரண்டு வாரகாலத்திற்குள் எழுத்துமூலம் திரு சுந்தரம் டிவகலாலா [செயலாளர் பழைய மாணவர் சங்கம்] அவர்களுடன் கல்லூரியில் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்,
யாழ். இ. க. பழைய
மாணவர் சங்கமும்,
மேற்படி குழுவும்.

க. சி. குகதாசன்,
நூற்றாண்டு விழாக்
குழுத் தலைவரும்,
அதிபரும்,
யா. இ. க.
[சி-5831]

## வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி "ஷப்றா"

**நிலையான வைப்பு**

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

**கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்**

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613,250 | 14,832,400 | 13,700,000 |
| வங்கி மீதிகள் | 10,911,712 | 3,189,084 | 1,894,245 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,310,887 | 23,173,830 | 23,700,680 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775,100 | 1,508,110 |

1982ஆம் ஆண்டு 78ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. பதிவு இல. NBS / R/90/021

**பணிப்பாளர் சபை**

எஸ். பி. ஈ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்

ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons.)
ஆர். பாலசுப்பிரமணியம்,

மேலதிக விவரங்களைப் பெற **ஷப்றா**

**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,**

61, நியூ புல்லர்ஸ்வீதி, கொழும்பு - 4
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 06 — 02 — 1946

மறைவு: 11 — 02 — 1991



அமரர்

**கந்தையா சின்னத்தம்பி [B. A.]**

[வவுனியா நெல் சந்தைப்படுத்தல் சபை, களஞ்சியப் பொறுப்பாளர்-ஜோல்டன் மில் பங்காளர்]

1991-02-10 ஆம் திகதி வவுனியாவில் இறைபடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 13-03-1991 புதன்கிழமை நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இறுதி நாளில் அன்னாரை வைத்தியசாலையில் சேர்த்து உடனிருந்து சிகிச்சையளித்த பெரியோர்களுக்கும், இறுதிமூச்சு விட்டபின் பூதவுடலைப் பராமரித்து பல இன்னல்களுக்கு மத்தியிலும், சாவகச்சேரி இல்லத்திற்கு எடுத்து வந்த உத்தமர்களுக்கும், அப்பணிக்கு உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதிக்கடமைகளை நிறைவேற்ற ஒத்துழைத்த பண்புள்ள, பாசமுள்ள அத்தனை பேருக்கும். எமது உயிர் உள்ளவரை நன்றிக் கடமைப்பாடுடையோம்

— குடும்பத்தினர்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. [16097]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முயன்றால் இயலும்!

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அத்தியாவசியப் பொருள்கள் பல வற்றை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளை விடக் குறைந்த விலைகளுக்கு விற்பதாக அறிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது, வியாபாரிகள் கொள்ளை லாபம் வைத்து மக்களை மேலும் இன்னலுற வைப்பதனைத் தடுப்பதற்காகவே விலைக்கட்டுப்பாடு கொண்டு வரப்படுவது உண்டு.

ஆனால், விலைக்கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் வேளை. சந்தைக்குப் பொருள் தாராளமாக வந்தாலும் பல வர்த்தகர்கள் கட்டுப்பாட்டு விலையோடு ஒட்டிக்கொண்டிருப்பார்கள்.

கட்டுப்பாட்டு விலை ஒன்றாக இருக்கும்போது அதனை விடக் குறைந்த விலைக்கு விற்க முன்வருபவர்கள் விலை வீழ்ச்சிக்கு வழிகோலிகள் ஆவர். நியாய சிந்தை உடையவர்கள் மட்டுமே அவ்வாறு முன்னோடிகளாக விளங்குவர்.

பொருள்கள் சந்தைக்குத் தாராளமாக வருவதற்கு முன்னரே, தட்டுப்பாடு நிலவும் காலத்திலேயே, கட்டுப்பாட்டு விலைக்குக் குறைவாக விற்பவர்களே உண்மையில் பாராட்டத் தகுந்தவர்கள் மக்கள் நலனில அக்கறை உள்ளவர்களாலும், மனிதாபிமானம், தர்ம சிந்தை உள்ளவர்களாலும் மட்டுமே அது இயலும். சத்தில் ஒருவரையே அந்த வகுப்பினராகக் காணமுடியும்.

மக்கள் நலனையே முதல் இலட்சியமாகக் கொண்ட கூட்டுறவுத்துறையில் கூட, பொருள்களுக்குத் தட்டுப்பாடு உள்ள வேளையிலும். கட்டுப்பாட்டு விலையை விடக் குறைந்த விலைக்கு வியாபாரம் செய்பவர்களைக் காண்பது அரிதாக உள்ளது.

தமது கொள்விலை, போக்குவரத்துச் செலவு, ஊழியர் வேதனம். உழைப்புக்குத் தேவையான லாபம் எல்லாம் சேர்த்து, கட்டுப்பாட்டு விலையை விடக்குறைவாக இருப்பின், குறைந்த விலைக்கு விற்பதே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயம்

ஆயினும் பல கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிர்வாகச் சீர்கேட்டினால் முதலில் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்ய கட்டுப்பாட்டு விலையைப் பயன்படுத்துவதும் உண்டு. இல்லையேல், கஷ்டம் நோக்காது தாம் சொந்தத்தில் முயற்சி எடுத்து பொருள்களைத் தருவிக்க முயற்சி செய்யாமல் இருப்பதாலும் கட்டுப்பாட்டு விலைக்கே பொருள்களை விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவது உண்டு.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் கட்டுப்பாட்டு விலைக்குக் குறைவாகப் பொருள்களை விற்கமுடியுமானால், ஏனைய கூட்டுறவுச் சங்கங்களால் ஏன் இயலாது?

நிர்வாகச் சீர்கேடு அல்லது மக்கள் நலனுக்காகப் பாடுபடவேண்டும் என்ற இலட்சியத்தை மறந்தமை ஆகிய இரண்டில் ஒன்றுதான் காரணமாக முடியும்.

அவை நிச்சயம் நிவர்த்தி செய்யப்பட்டாக வேண்டும். அப்போது தான் கூட்டுறவுத் துறையை மட்டுமன்றி தனியார் வியாபாரிகளையும் மக்கள் நலன்நாடும் அளவுக்கு மாற்றமுடியும்.

# தொழிலாளர் கல்வி நெறிக்கான விரிவுரை புத்தாண்டுடன் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழகத்தில தொழிலாளர் கல்வி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில அனுமதிக்கப்படும மாணவர்களுக்கான விரிவுரைகள் தமிழ் புத்தாண்டுடன் ஆரம்பிககப்படவுள்ளன.

தொழிலாளர் கல்விக்கான தனிப்பிரிவு அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தனிப்பிரிவாகச் செயற்படும் வரை தொழிலாளர் கல்வித் துறை கற்பிப்பதைய கல்வியியற்புலத்தின் மேற்பார்வையில் செயற்படவுள்ளது என அறியப்படுகின்றது. [இ-11]

## பஸ் மீது ஹெலி சூடு

சேரதீவுப் பயணிகளை இறக்கிவிட்டு திரும்பிய பஸ் மீது புசதூர் சந்தியில் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பஸ் சேதமடைந்தது.

வெள்ளி மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது பஸ்ஸில் இருந்த ஒருவர் வெளியே பாய்ந்து முட்கம்பி வேலி மேல விழுந்தார்

காயத்துக்குள்ளான இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கோபால் [வயது 41] என்பவரே காயமடைந்தவராவார். [இ-117]

## ஆனையிறவில் ஷெல் வீச்சு

தென்மராட்சி மார்ச் 12 சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு ஆனையிறவு முகாமிலிருந்து நால புறமும் ஆட்லறி ஷெல் வீச்சு இடம்பெற்றது.

குண்டுகள் பளைப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. [இ-117]

## பொருள்கள் விலை நிர்ணயம் பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12 கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சகல ப. நோ. கூ. சங்கத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சி சிவமகாராசா கலந்துரையாடலுக்குத் தலைமை வகிப்பார்.

## வேலணையில் மகளிர் தினம்

புளியங்கூடல், மார்ச் 12 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வேலணை அம்மன் ஆலய முன்றலில் எழுச்சி விழா இடம் பெற்றது.

இந்த வைபவத்தில தீவக மகளிர் முன்னணி பொறுப்பாளர் மங்கையற்கரசி, தீவக மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் சுதா ஆகியோர் சிறப்பு உரை நிகழ்த்தினர். [இ-12]

## கிழக்கு அரசு ஊழியருக்கு அரசு விசேஷ விடுமுறை

கொழும்பு, மார்ச் 12 கடந்த ஆண்டு மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கடமைக்குச் செல்லாதிருந்த அரச ஊழியர்களுக்கு அக்காலத்தை விசேஷ விடுமுறையாகக் கணிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி—12-06-90 முதல் 03-09-90 வரையான காலம் மட்டக்களப்பு மாவட்ட அரச ஊழியருக்கு விசேஷ விடுமுறையாகவும். 12 - 06 - 90 முதல் 01 09 90 வரையான காலம் அம்பாறை மாவட்ட அரச ஊழியருக்கும் திருமலை மாவட்ட அரச ஊழியருக்கும் விசேஷ விடுமுறையாகவும் வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

## கால்நடை திருட்டு

கோப்பாய், மார்ச் 12 இராணுவ நடவடிக்கை காரணமாகக் குப்பிளான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சென்றவர்களின் வீடுகளில கால் நடைகள் பெருமளவில் திருட்டுப் போயுள்ளன [இ-72]

## ரஞ்சனின் கடைசி அறிக்கை வவுனியா பற்றியதாம்!

முன்னாள் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின அகால மரணமடைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் வவுனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது சம்பந்தமான அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தாராம்

அந்த அறிக்கையில் கூறப்பட்ட யோசனைகளைச் செயற்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. விஜேதாசா தலைமையில் நடந்த மாநாட்டில் ரஞ்சனின் அறிக்கை பற்றி ஆராயப்பட்டு நடவடிக்கைகளை எடுக்க முடிவாகியது.

வவுனியா தெற்கு (சிங்களம்). வவுனியா தெற்கு [தமிழ்] ஆகிய இரண்டு உதவி அரசாங்க பிரிவுகளையும் சேர்ந்த அரச ஊழியர் அனைவரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன் கடமைக்குத் திரும்ப வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு வேலைக்குத் திரும்பாதோரின் இடங்களுக்கு புதியவர்களை அமைய அடிப்படையில் சேர்க்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## சுயாட்சி இல்லையேல் குயுபெக் தனிநாடு கோரும்

ஒட்டாவா, மார்ச் 12 மத்திய அரசாங்கம் விரிவான சுயாட்சி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தத் தவறும் பட்சத்தில் கனடாவில் இருந்து பிரிந்து போகும் உரிமையை குயுபெக் மாகாணத்துக்கு வழங்குவதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை 1992இல் நடத்துவது என்று குயுபெக் மாநில ஆளும் லிபரல் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் வருடாந்த மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

குயுபெக் பிரெஞ்சு மொழி பேசும் மாநிலம்- கனடாவில் உள்ள ஏனைய மாநிலங்களில் ஆங்கில மொழி பேசுவோரே பெரும்பான்மையினராக உள்ளனர்

குயுபெக் மாநில மக்களை தனித்துவமிக்க ஒரு சமூகமாகக் கணிப்பதை வலியுறுத்தும் மீச்லேக் (Meech Lake accord) உடன்பாடு ஒன்றைத் தயாரித்து செயற்படுத்த கூடிய மத்திய அரசு முன்வந்தது ஆனால் அதனை கனடாவின் ஏனைய ஆங்கில மொழிபேசும் மாநிலங்கள் ஏற்க மறுத்து விட்டன.

இதனைத் தொடர்ந்தே குயுபெக் மாநிலம் பிரிந்து தனிநாடாகவேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்துள்ளது. [இ - எ]

## தூதரகங்கள் மீண்டும் திறப்பு

லண்டன், மார்ச் 12 பதினெட்டு வெளிநாடுகள் தங்கள் தூதரகங்களை குவைத்தில மீண்டும் திறந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ எ)

# மகளிர் கல்லூரிக் கட்டடங்கள் யாவும் நாசம்

[நேற்றைய தொடர்ச்சி]

வேம்படியையும் கடந்து, காட்டுவளவு ஒழுங்கைக்குள் செல்லும் பொழுது, வீதியின் இரு பக்கங்களிலும, ஒரே கற்குவியல்கள்!...... வீடுகள் எல்லாமே உடைந்து போய் இருந்தன! அங்கே உடைந்த சற்குவியல்களுக்கு மத்தியில் நின்ற ஸ்ரீதரன் மாஸ்ரர் தனது மனைவி. மகனுடன் நின்று புதையல் எடுப்பது போல எதை எதையோ தேடிக்கொண்டிருந்தார்.

அவரது 4 வயது மகன், சற்குவியல்களுக்குள் கையை விட்டபடி துளாவிக் கொண்டிருந்தான்.

'என்ன மாஸ்ரர்!... உங்கடை மகன் என்ன தேடிக் கொண்டிருக்கிறார்?...''

''அவர் தன்ரை விளையாட்டுச் சாமான்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.''

ஸ்ரீதரன் மாஸ்ரர் இதனைக் கூறிவிட்டுத் தன்னுடைய மகனை, எங்களுக்கு அருகில் அழைத்தார். அந்தப் பிஞ்சுக் குழந்தையின் எதிர்பார்புகள், ஏக்கங்களும் இடிந்து தரைமட்டமான வீட்டுடன் நிர்மூலமாகிவிட்டனவோ?

எங்கு பார்த்தாலும், ஒரே மாதிரியாக, இடிந்து உருக்குலைந்த வீடுகளே [illegible] குத் தெரிந்தன. மீண்டும், மீண்டும் எரிந்து, உடைந்து போன கட்டடங்களைப் பார்க்கும்பொழுது, சிங்களப் பேரினவாதிகளும், இந்திய ஏகாதிபத்தியவாதிகளும் கூட்டாகவே சேர்ந்து தமிழர்களுக்கு எதிராக நடத்தும் போர வெறியின் மீதி விளைவுகளாக, அவை வல்வெட்டித்துறை வீதியெங்கும் சிதறிக் கிடப்பதாகவே தெரிந்தன.

உடைந்து, எரிந்த வீடுகளில். உடையாதலும், எரியாமலும் இருக்கின்ற படங்களைப் பார்க்கின்றேன். காந்தி! ..சுபாஸ்! ..நேரு!... விவேகானந்தர்!... பட்டேல்!...

எமது மக்கள் இந்தியாவின் மீது வைத்துள்ள பற்றை இவை காட்டிக் கொண்டிருக்கின்றன. வட இந்தியாவின் ஆரிய பரம்பரை எமக்கு இந்த வரலாற்றுத் துரோகம இழைக்காலும, எமது இனத்தின் விடுதலைக்காகத் தம்மையும், தமது அரசியல் செல்வாக்கையும் தியாகம் செய்யும் தமிழகத் தலைவர் [illegible]

வல்வைப் புயல்
பகுதி பதின்மூன்று

ஆகியோரை மறந்து விட முடியுமா?

### நெடுமாறன் கண்ணீர் வடித்தார்

கடந்த வருடம் பட ஓபக்கு நரீ. வி சி. குகநாதனின் இல்லத்தில் திரு ப. நெடுமாறனுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது-

''ஈழத்தில் எமதுஉடன் பிறப்புக்கள நமது பகையினராலேயே கொடுமைப்படுத்தப் படும்பொழுது நாம் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறோம்? சிங்களப் படையால் கொடுமைப்படுத்தப் பட்டது போதாதென்று, நமது இந்தியப் படையும் சேர்ந்தல்லவா கொடுமைப் படுத்துகின்றது... ஒரு முஸ்லிம் பாதிக்கப்பட்டால, முஸ்லிம் நாடுகள் பார்த்துக் கொண்டிருக்குமா?... தமிழர்களாகப் பிறந்த குற்றத்திற்காக அங்கே வதைபடுகிறீர்கள்... நாங்கள் எல்லாம இங்கே வாய் கட்டிக் கொண்டிருக்கின்றோம்....''

நெடுமாறன் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறும் பொழுது, அவர் உதடுகள் ஆத்திரத்தால் துடித்தன... கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது!

காட்டுவளவையும் தாண்டி, நெடியகாடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தபொழுது அரசடியை அடைந்தோம். அங்கே எதிரும் புதிருமாக நான்கு வீடுகள் உடைந்து போய் இருந்தன.

வானத்தில் குண்டுவீச்சு விமானங்களைக் கண்டதும், அந்த வழியால வந்து கொண்டிருந்த இளைப்பாறிய தபால் அதிபரான ஆறுமுகம் கந்த

வல்வை
ந. அனந்தராஜ்

சாமி அங்கே நின்ற அரசமரத்தின்கீழ் போய் ஒதுங்கி நின்றார் அதிலிருந்து சிலமீற்றர் தூரம் தள்ளி விழுந்த குண்டின் சிதறல்களால், உடல் சிதறி அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

ஊரின் கிழக்குப் பகுதியில் அமைந்த ஒரு பெண்கள் கல்லூரி வல்வை மகளிர் கல்லூரி இது முழுக்க முழுக்க ஊரவர்களினால அன்பளிப்புச் செய்யப்பட்ட பணத்தில் இருந்து கட்டப்பட்ட நான்கு பெரிய கட்டடங்களை உடையது அந்தக் கல்லூரியின நடு முற்றத்தில விழுந்த பெரிய குண்டின் தாக்கத்தினால், எல்லாக் கட்டடங்களுமே சேதமாக்கப்பட்டுவிட்டன.

[வளரும்]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எரிபொருள் தீர்ந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். போதனா வைத்திய சாலையின் பாவனைக்காக கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட எரிபொருள் முற்றாக முடிந்துவிட்டது.

இதனை அடுத்து செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்தே எரிபொருள் கடனாகப் பெறப்பட்டு நாளாந்த கட்டாய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

போதனா வைத்தியசாலைக்கு எரிபொருள் கொண்டுவர இருந்த கப்பலில் எதிர்பார்க்கப்பட்டது போல அது வராததாலேயே எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது என வைத்தியசாலை நிர்வாக மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

[இ-15]

## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் நடராசா

இல 1010/4 காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த முன்னாள் நைட்றே டிரேடிங் கொம்பனி கணக்காளர் விசுவலிங்கம் நடராசா அவர்கள் 11 - 03 - 91 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற விசுவலிங்கம் சின்னம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புச் சகோதரரும், சத்தியநாதன் [ஜேர்மனி], தேவானந்தன், சோதிமலர், தேவராணி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், வசுந்தராதேவி [கனடா], அமுதா, பத்மநாதன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகனின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 12 - 03 - 91 காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இதனை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. தேவானந்தன் (மகன்)

[16100]

### திருமதி துரைஐயா சிவபாக்கியம்

திருமதி துரைஐயா சிவபாக்கியம் 10ஆம் திகதி இரவு காலமானார். அன்னார் கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற சுகாதாரப் பரிசோதகர் சிவகுரு வேலுப்பிள்ளை துரைஐயாவின் அருமை மனைவியும், Dr. து. உருத்திரமூர்த்தி [G. P., U. K.], து. ரட்ணேஸ்வரமூர்த்தி [கட்டடப் பரிசோதகர், யாழ். கல்வித்திணைக்களம்], Dr து. விநாயகமூர்த்தி [கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும், உருத்திரகுமார், மகேந்திரகுமார், ரட்ணகுமார், நிர்மல்குமார், யோகலக்ஷ்மி, கிரிஷாந்தி, டில்லானி ஆகியோரின் அருமைப் பேத்தியும், மகேஸ்வரி, யோகராணி, சுலோச்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 03 - 1991 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. ரட்ணேஸ்வரமூர்த்தி

''சிவகிரி''
பொயிட்டி,
அச்செழு.

[16099]

### தம்பையா பசுபதி

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி வாசியும், முன்னைநாள் கிளிநொச்சி ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளருமாகிய தம்பையா பசுபதி அவர்கள் 11 - 03 - 1991 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், ஊரெழு காலஞ்சென்ற மயில்வாகனம் சின்னத்தங்கச்சியின் இளைய புதல்வரும் நித்தியானந்தன் [ஜேர்மனி] ஜெகதீஸ்வரன், சுரேஸ்வரி [வேம்படி மகளிர் கல்லூரி], சாந்தீஸ்வரி [செனற் பெனடிக் நல்லூர்] ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் [கோண்டாவில்], காலஞ்சென்ற கோபாலபிள்ளை [இளைப்பாறிய அதிபர் வட்டுக்கச்சி], காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை [வண்ணார்பண்ணை] விசாலாட்சி [ஊரெழு], நீலாட்சிப்பிள்ளை [நீர்வேலி], காலஞ்சென்ற பாக்கியம் [கோண்டாவில்] ஆகியோரின் சகோதரரும், இராசரத்தினம், இராசதுரை, கந்தப்பிள்ளை, தம்பிமுத்து, நடராசா, ஏரம்பமூர்த்தி, பாலசுப்பிரமணியம், நகுலேஸ்வரி, பொன்னம்மா, புவனேஸ்வரி, கமலாதேவி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், ஞானேந்திரன், விக்னேஸ்வரமூர்த்தி, மகேந்திரன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 03 - 91 செவ்வாய்க்கிழமை [இன்று] காலை 11.00 மணிக்கு நீர்வேலி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. ஜெகதீஸ்வரன் (மகன்)

[15905]

# தி.மு.க. - ஜனதா தள் நட்பு முறியுமா?
# தேர்தல் வரு முன்பே கருத்து மோதல்!

சென்னை, மார்ச் 12

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜனதா தள் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் தோழமைக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு செய்வது தொடர்பான பேச்சுக்களை தி. மு. க. தலைவர் கருணாநிதி பின்போட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே தொகுதி உடன்பாடு பற்றிய பேச்சுக்களை நடத்த முடியும் என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

கருத்து வேறுபாடு உருவாவதற்கு காரணமாக இருந்த இரண்டு சம்பவங்கள் வருமாறு:-

ஒன்று:- நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட ஜனாதிபதி மறுப்பாரேயானால், ஜனாதிபதி மீது நாடாளுமன்றத்தில் கண்டனப் பிரேரணை கொண்டு வரவேண்டும் என்று திரு. கருணாநிதி கூறியதை ஏற்க முடியாது என்று, தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு. என். ரி. ராமராவ் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இரண்டு: ஜனதா தள் அலை நாட்டில் வீசுகிறது என்பதை தி. மு. க. நம்பித்தான் ஆக வேண்டும் என்று ஜனதா தள் தலைவர்களான எஸ். ஆர். பொம்மையும், ராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் கூறியதை நேற்று தி. மு. க. வன்மையாகக் கண்டித்தது.

சேலம் நகரில் நடந்த ஜனதா தள் மாநாட்டில் பேசிய இருவரும், ஜனதா தள் கட்சியின் சக்தியை தி. மு. க. புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தனர்.

இக்கூற்றை வன்மையாகக் கண்டித்து தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சில் மனோகரன் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

நாட்டில் ஜனதா தள் அலை வீசுகிறது என்றால் எதற்காக பிராந்தியக் கட்சிகளுடன் அது கூட்டுச்சேர வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

[அ-எ]

## வானொலி நாடக பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 12

வானொலி நாடகக் கலைஞர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று ''நிதர்சனம்'' நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப் பயிற்சி வகுப்பில் வானொலி நாடக எழுத்தாளர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாகவே 'நிதர்சனம்' அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஓ]

## இந்திய அரசி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரணையுமே நேற்று நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சட்ட மூலங்கள் ராஜ்ய சபையில் இன்று நிறைவேற்றப்படவிருக்கிறது.

இரண்டு சபைகளிலும் இச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்படாத நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைக்க அல்லது பொதுத்தேர்தலை நடத்த அல்லது இரண்டுக்குமே ஜனாதிபதி உத்தரவிட்டால் அரசமைப்புச்சட்ட நெருக்கடி ஏற்படும் என சட்டவல்லுனர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது போன்று இன்று ராஜ்யசபையிலும் இச் சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி தமது முடிவை சுயாதீனமாக மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இன்று ராஜ்ய சபையில் இச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஜனாதிபதி தமது முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-எ]


## தேவை

பாவனைக்கு உகந்ததாக நல்ல நிலையில் உள்ள தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்,
[யாழ். பிரிவு]
73, கண்டி வீதி,
சுண்டிக்குளி.

[C/5837]


## வவுனியாவில் ஊரடங்கு

வவுனியா நகரம் மற்றும் வவுனியா சிங்களப் பிரிவு தவிர்ந்த வவுனியா நிர்வாக மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் இன்று [செவ்வாய்] காலை 5. 30 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும் ஊரடங்குச் சட்டம் இன்று மாலை 6 மணிக்கு நீக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

[உ-எ]

## நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டாம் என்கிறது காங்கிரஸ்!

புதுடில்லி, மார்ச்12

பொதுத் தேர்தல் நடந்து முடிவுகள் வெளியாகும்வரை, தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கக் கூடாது என்று இந்திரா காங்கிரஸ் கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

கட்சியின் பேச்சாளரும் எம் பி யுமான ஜனாப் எம் ஜே. அக்பர் இதனைச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இந்திரா காங்கிரஸின் இந்தப் புதிய நிலைப்பாட்டை எதிர்க் கட்சிகள் கண்டித்துள்ளன.

பின் கதவால் ஆட்சிக்கு வர இந்திரா காங்கிரஸ் முயற்சிக்கின்றது என்பதை இது நிரூபிக்கிறது என்று அக்கட்சிகள் கூறியுள்ளன. [அ-எ]

## சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி ஈராக்கில் வலுக்கிறது!

குர்டிஷ் இனப்போராளிகள் ஈராக்கின் வடக்குப் பகுதியில் இரண்டு மாகாணங்களையும் நான்கு நகரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை-

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் படைகளை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்திவரும் மற்றொரு அமைப்பான - ரஷியா அடிப்படைத் தீவிரவாதக் குழு-ஈராக்கின் பெரும் பகுதி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவித்துள்ளது.

சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு தரும்படி இக்குழு சர்வதேச சமூகத்தை கோரியுள்ளது.

இதனிடையில் ஈராக் உள்ள 17 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் லெபனான் தலைநகர் பேரூட்டில் 3 நாள் மாநாடு ஒன்றை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சதாம் ஆட்சியைக் கவிழ்ப்பது தான் தங்கள் ஒரே நோக்கம் என்று மாநாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் ஜனநாயக ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதே தற்போதைய கிளர்ச்சியின் பிரதான இலட்சியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சுக்கள் நடத்தி அரசியல் தீர்வுகாண ஜனாதிபதி சதாம் ஹுசேன் தவறுவாரேயானால் ஈராக்கில் உள்நாட்டுக் கலவரம் பெரிய அளவில் வெடிக்கும் என்று ஈரான் ஜனாதிபதி அலி அக்பர் ரஸ்வன்ஜானியும் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

[உ-எ]

## ஈராக்கிற்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

சதாம் ஹுசேனின் ஆயுத படையினர் கிளர்ச்சிக்காரர்களை அடக்க இரசாயன ஆயுதங்களைப் பாவிப்பின், அமெரிக்கா ஈராக் மீதான விமானத் தாக்குதலை மீண்டும் ஆரம்பிக்கும் நிலை ஏற்படலாம்.

—இவ்வாறு ஈராக்கை அமெரிக்கா எச்சரித்திருப்பதாக துபாய் வானொலி தெரிவித்தது.

கிளர்ச்சிக்காரர்கள் மீது ஜனாதிபதி சதாமுக்கு விசுவாசமான படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்க ஆரம்பித்து விட்டதாக ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் தெரிவித்தன என்றும் அவ் வானொலி தெரிவித்தது.

## தமிழ்தின விழா

கொழும்புத்துறை. மார்ச், 12

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

[இ-30]

## மாதர் உற்பத்திக் குழு

கிராமிய உற்பத்தி குழுக்களின் உப பிரிவான மாதர் உற்பத்திக்குழுக்கள் பலபகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அராலி மத்தி மாதர் உற்பத்திக்குழு கடந்த 6ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

[இ-12]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org